

நிலைத்த வளர்ச்சிக்கு பெண் எனும் பேராற்றல்

# பெண் விவசாயிகளின் முன்னேற்றத்தில் உழவர் மாமன்றங்கள்

## செயல் திட்ட பணியரங்கம்

## மதுரை கூடலரங்கம் - 2019

**செப்டம்பர் 19, 2019, வியாழக்கிழமை**

**தமுக்கம் மைதானம், மதுரை**

*Supported by*

LARSEN & TOUBRO

*Organized by*

மானாவாரி விவசாய மேம்பாட்டுத் திட்டம்

தானம் அறக்கட்டளை

## பின்னணி

மானாவாரி விவசாயத்தைப் பொறுத்தமட்டில் பெண்களின் பங்கு மிக அதிகம். சிறுதானிய உற்பத்தி, சிறுதானியத்தை பதப்படுத்துதல் மற்றும் சிறுதானிய உணவு பதார்த்தங்களை செய்து ஊட்டச்சத்தான உணவை குடும்ப உறுப்பினர்களுக்கும் மற்றவர்களுக்கும் பகிர்வதில் பெண்களின் பங்கு மிகவும் அதிகம். குடும்பத் தேவைக்கான குடிநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு, வீடுகளில் சுகாதாரம் சம்பந்தப்பட்ட பணிகள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு, இவைகள் பெண்களின் பணியாகவே விதிக்கப்பட்டு பெண்களின் மூலமாகவே செய்யப்பட்டு வருகிறது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று.

மானாவாரி விவசாயம் செய்து கொண்டிருக்கக் கூடிய பெண்களின் நிலை வருந்த தக்கதாகவே இருக்கின்றது. இன்றைய காலக்கட்டத்தில் மானாவாரி விவசாயமானது பல்வேறு பிரச்சனைகளை சந்தித்துக் கொண்டிருப்பதால் அதில் இருந்து நிலையான வருமானம் கிடைப்பதில்லை. மானாவாரி விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்க்கை நடத்துவது என்பது மிகவும் கடினமாக இருப்பதால், மானாவாரி விவசாயிகள் வேறு ஒரு தொழிலை மேற்கொண்டு கூடுதல் வருமானம் ஈட்டி குடும்பம் நடத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர். ஆண் விவசாயிகள் வேறு வேலையைத் தேடி வெளியூர் சென்று கொண்டிருக்கக் கூடிய சூழல் பெரும்பாலான பகுதிகளில் உள்ளது. இதனால் உள்ளூர் விவசாயத்தை கவனித்துக் கொள்ளக் கூடிய முழுப்பொறுப்பு பெண்களையே சார்ந்துள்ளது. ஆனால் விவசாய நிலமானது ஆண்களின் பெயரில்தான் இருக்கிறது. பெரும்பாலான முடிவுகள் ஆண்களாலேயே எடுக்கப்படுகின்றன. இந்த சூழலில் பெண் விவசாயிகளுக்கு தேவைப்படும் பயிற்சிகளைக் கொடுத்து அவர்களுக்கு முடிவு எடுக்கும் திறனை வளர்ப்பது மிகவும் அவசியமானது.

தானம் அறக்கட்டளையின் மானாவாரி விவசாய மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சிறுதானிய அறக்கட்டளையில் பெண் விவசாயிகளை உழவர் குழுக்களாக அமைத்து, உழவர் மன்றங்கள் மற்றும் உழவர் மாமன்றங்கள் ஆகியவற்றை உருவாக்கி, பெண்களின் முன்னேற்றத்திற்காக விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுத்தமான குடிநீர், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து போன்ற துறைகளில் பல்வேறு வகையான பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த பின்னணியில் பெண்களின் முன்னேற்றத்தில் உழவர் மாமன்றங்களின் பங்களிப்பு எப்படி இருந்து கொண்டிருக்கிறது என்பதை சீர்தூக்கி பார்க்கவும், உழவர் மாமன்றங்களின் பங்களிப்பை அதிகரிக்க உண்டான வழிமுறைகளை ஆராயவும் ***“பெண் விவசாயிகளின் முன்னேற்றத்தில் உழவர் மாமன்றங்கள்”*** என்ற செயல் திட்ட பணியரங்கமானது மதுரை கூடலரங்கம் 2019-ன் ஒரு நாள் நிகழ்வாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

## நோக்கங்கள்

- பகுதி வாரியாக பெண் விவசாயிகளின் முன்னேற்றத்தில் உழவர் மாமன்றங்களின் பங்களிப்பை ஆராய்தல்
- பெண்கள் முன்னேற்றத்தின் அவசியத்தை உழவர் மாமன்ற பொறுப்பாளர்களுக்கும் தானம் அறக்கட்டளை பணியாளர்களுக்கும் உணர வைத்தல்
- பெண்கள் விவசாயம், இதர வாழ்வாதார தொழில்களில் சந்தித்திக் கொண்டிருக்கக் கூடிய பிரச்சனைகள் மற்றும் அதனை சமாளிக்க அவர்கள் கையாளும் வழிமுறைகளை தெரிந்து கொள்ளுதல்
- பெண் விவசாயிகள் ஈடுபடக்கூடிய அனைத்து பணிகளிலும் உழவர் மாமன்றங்களின் உதவிகளுக்கான செயல்திட்டம் தீட்டுதல்

மதுரை கூடலரங்கம் என்ற நிகழ்வை தானம் அறக்கட்டளையானது இரண்டு வருடத்திற்கு ஒரு முறை வளர்ச்சி சார்ந்த அறிவு மற்றும் திறனை மேம்படுத்தும் வகையில் நடத்தி வருகிறது. இந்த வருடம் பெண்கள் முன்னேற்றத்தை மையப்படுத்தி இக்கூடலரங்கம் நடைபெறவிருக்கின்றது. மேலே சொல்லப்பட்ட செயல் திட்ட பணியரங்கமானது மதுரை கூடரலங்கம் 2019-ல் ஒரு நிகழ்ச்சியாக நடத்தப்படவிருக்கின்றது.

## பங்கு கொள்வோர்

இப்பணியரங்கத்தில் தமிழ்நாட்டைச் சார்ந்த பல்வேறு பகுதிகளில் உள்ள மானாவாரி விவசாய மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சிறுதானிய அறக்கட்டளை உழவர் குழு உறுப்பினர்கள், உழவர் மாமன்ற தலைவர்கள், செயற்குழு உறுப்பினர்கள், உழவர் மாமன்ற செயல் அலுவலர்கள், தானம் அறக்கட்டளையின் பணியாளர்கள், நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள், வங்கி மேலாளர்கள், ஆர்வமுள்ள தனி நபர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு பயன்பெறவிருக்கின்றனர்.



**இடம்: தமுக்கம் மைதானம், மதுரை**

**நாள்: செப்டம்பர் 19, 2019, வியாழக்கிழமை**

## நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| 09.00 - 09.30 | am | பதிவு செய்தல் |
| 09.30 - 09.40 | am | இறை வணக்கம் |
| 09.40 - 09.50 | am | வரவேற்புரை<br>திரு. மு. பழனிசாமி, திட்டத்தலைவர்<br>மானாவாரி விவசாய மேம்பாட்டுத் திட்டம்<br>தானம் அறக்கட்டளை, மதுரை |
| 09.50 - 10.05 | am | நோக்கங்கள், பணியரங்கத்தின் முறைகள் மற்றும் வெளிப்பாடுகள்<br>திரு. வே. வேடியப்பன், அணித்தலைவர்,<br>தானம் அறக்கட்டளை, மதுரை |
| 10.05 - 10.30 | am | அனுபவ பகிர்வு<br>முன்மாதிரி பெண் விவசாயிகள் / பெண் விவசாய குழுக்கள் |
| 10.30 - 12.30 | pm | துறை வாரியான சிறு குழு விவாதம் |
| 12.30 - 01.00 | pm | சிறு குழு விவாத கருத்துக்களை பகிர்தல் |
| 01.00 - 02.00 | pm | உணவு இடைவேளை |
| 02.00 - 04.00 | pm | உழவர் மாமன்றம் வாரியாக செயல் திட்டமிடல் |
| 04.00 - 04.30 | pm | செயல் திட்டம் பகிர்வு |
| 04.30 - 05.00 | pm | தீர்மானங்கள், பின்னூட்டம் மற்றும் முடிவு |
| 05.00 - 05.15 | pm | நன்றியுரை / தேசிய கீதம்<br>திரு. த. பரமசிவம், திட்ட நிர்வாகி<br>தானம் அறக்கட்டளை, குடியாத்தம் |

## இப்பணியரங்கத்தில் எதிர்பார்க்கப்படும் வெளிப்பாடுகள்

- உழவர் மாமன்ற பொறுப்பாளர்கள் மற்றும் தானம் அறக்கட்டளை பணியாளர்களுக்கு, பெண் விவசாயிகள் முன்னேற்றத்தில் உழவர் மாமன்றங்களின் பங்களிப்பின் அவசியம் பற்றிய புரிதல்
- முன்மாதிரி பெண் விவசாயிகள் / விவசாய குழுக்கள் இவர்களை அங்கிகரித்தல் மற்றும் இவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுதல்
- பெண் விவசாயிகளின் முன்னேற்றத்தில் உழவர் மாமன்றங்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான செயல் திட்டம்

### மேலும் விபரங்களுக்கு


**மு. பழனிசாமி**
திட்ட தலைவர்

**மானாவாரி விவசாய மேம்பாட்டுத் திட்டம்**
**தானம் அறக்கட்டளை**
1ஏ, வைத்தியநாதபுரம் கிழக்கு, கென்னட் குறுக்கு தெரு, மதுரை - 625 016
தொலைபேசி: 0452 2302528, அலைபேசி: 94439 25261

**மு. கார்த்திகேயன்**
முதன்மை நிர்வாக அலுவலர்

**சிறுதானிய அறக்கட்டளை**
**தானம் அறக்கட்டளை**
1/31-33, 6வது தெரு, ராஜாஜி நகர், பேஸ் 2, கிருஷ்ணகிரி - 635 001
தொலைபேசி: 04343 - 226568, அலைபேசி: 90940 56540